**வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியம் - 2017**

---

வனவிலங்கு பாதுகாப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றும் ஏனைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2009 இன் 22 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 71 (2)(ஏ) இன் கீழ் வழங்கப்படும் கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறிய நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானதாகத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்jy; முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முமைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக் கூற்றுகள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 69 பந்தியின் பிரகாரம் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு கழித்தல் ஆரம்பிக்கப்பட வேண்டியது அதனைப் பயன்படுத்துவதற்கு தகுதியான நிலைக்கு கொண்டு வந்த பின்னதாகுமெனினும் அதற்கு முரணாக நிதியத்தினால் சொத்துக்கள் உரித்தாக்கிய ஆண்டிற்கான முற்றாக பெறுமதி கழிப்பதற்கும் அகற்றும் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு கழிக்காமல் இருக்கும் கொள்கை ஒன்றினை இனங்கண்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பிரதான கட்டிடங்கள் வளவில் கற்கள் பதிப்பதற்கு மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 624,597 இற்கான தொகையினை செலவு ஒன்றாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டின் போது அரச மரக்கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை என ரூபா 2,614,486 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் அரச மரக் கூட்டுத் தாபனத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 512,751 தொகை மாத்திரம் கணக்கீடு செய்திருந்தமையால் ரூபா 2,101,735 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 05 வருட காலத்தை விட மிகைத்துள்ள செலுத்த வேண்டிய சேவைக் கட்டண ரூபா 5,908,269 தொகை இனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைததுவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 இலக்கங் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) பந்தி 5.2.4 | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் பாதீடு அங்கீகரிக்கப்பட வேண்டுமெனினும், 2017 ஆண்டிற்கான பாதீடு 2017 ஜனவரி 17 திகதி அன்றே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) பந்தி 8.2.2 | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 693,399,171 தொகை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்திருந்த போதிலும், அதற்காக நிதி அமைச்சரின் இணக்கம் மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (இ) | 2013 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய 4/2013 ஆம் இலக்க வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்தின் கணக்கு சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 2,797,190 தொகைக்கான வெகுமதிகளை ஏற்றுக்கொள்ளல், கணக்கீடு செய்தல் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் மிகை ரூபா 1,546,489,131 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,168,164,618 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 378,324,513 இற்கான வளர்ச்சி ஒன்று காணக்கூடியதாக இருந்தது. பூங்காக்களுக்கான பிரவேசக் கட்டணம் ரூபா 324,724,976 இனால் மற்றும் சேவைக்கட்டணம் ரூபா ரூபா 53,558,964 இனால் அதிகரித்தல் நிதி விளைவுகளின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 ஆண்டுகளினது நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2013 ஆண்டின் போது ரூபா 530,377,190 தொகையாகக் காணப்பட்ட மிகை இடையறாமல் வளர்ச்சி அடைந்தது. 2017 ஆண்டின் போது ரூபா 1,546,489,131 தொகை ஆகக் காணப்பட்டது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மீள் சீராக்கம் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 594,139,340 தொகையாகக் காணப்பட்ட பங்களிப்பு 2017 ஆண்டின் போது ரூபா 1,664,801,571 தொகை வரை இடையறாமல் வளர்ச்சி அடைந்திருந்தது.

## 3.2 நிதியத்திற்கு எதிராக அல்லது நிதியத்தினால் ஆரம்பத்திருந்த சட்ட சம்பவங்கள்

மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் வனசீவராசிகள் குற்றங்கள் மற்றும் தேசிய பூங்காக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த சட்ட விரோதச் செயல்கள் தொடர்பாக வெளிநபர்களுக்கு எதிராக கூட்டுத்தொகை ரூபா 31,862,000 இற்கான நட்டஈடு கோரி 702 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டின் போது ரூபா 29,846,000 இற்கான நட்டஈடு கோரி 601 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி அளவில் நிதியத்திற்கு கிடைக்க வேண்டியிருந்த நட்டஈட்டுத் தொகை ரூபா 14,056,100 தொகை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியத்தின் தூர நோக்கு மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக உரிய காலப்பகுதி அடங்கும் விதத்தில் 03 வருடங்களை விட குறையாத காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கருமங்கள் நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்காத 10 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 57,291,860 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள 05 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 50 சதவீத்தை விட குறைவாகக் காணப்பட்டது.

(ஆ) இயந்திர உபகரணங்கள் வாகனங்கள் மற்றும் படகுகள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 127,000,000 தொகை மற்றும் 33 செயற்திட்டங்களுக்காக ரூபா 477,888,870 இற்கான நிதி ஏற்பாடுக்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு ஏதும் மேற்கொள்ளப்பட்டிக்காதுடன் செயற்திட்டங்கள் ஏதும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆண்டின் போது 26 தேசிய வனப்பூங்காக்களில் மிருகங்களை பார்வையிடுவதற்காக வழங்கியிருந்த அனுமதிப் பத்திரங்களின் மூலம் ரூபா 2,235,036,136 இற்கான வருமானம் ஒன்று கிடைத்திருந்த போதிலும் வன விலங்குகளை பாதுகாத்தல் மற்றும் தீவிரமாக பாதுகாத்தல் ஆகிய விடயங்களுக்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 68,388,992 தொகை அதாவது 3 சதவீமான குறைந்த சதவீதமேயாகும்.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

படகு ஒன்று கொள்வனவு செய்வதற்காக 2017 மே 31 திகதி இலங்கை கடற்படைக்கு ரூபா 5,345,100 இற்கான தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே 09 திகதிவரை படகு நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டுத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பல்வேறு காரணங்களினால் கைவிடப்பட்ட காட்டு யானைகள் முதலாக வனஜீவராசிகள் மற்றும் பல்வேறு நோய்களுக்கு ஆளாகிய வன சீவராசிகளுக்கு அரவணைப்பு வழங்கும் உடவலவ யானை இடைதங்கல் இல்லத்தில் கணக்காய்வு திகதியாகிய 2018 ஜனவரி 27 வரை வனசீவராசிகளுக்கு அத்தியவசியமான மருந்து வகைகள் கலஞ்சியத்தில் காணப்படவில்லை. மேலும் காலவதியான ரூபா 428,053 தொகை பெறுமதியான 17 வகையான மருந்துகள் 4004 இருப்பு அலகுகள் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அவை வனசீவராசிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 ஆண்டின் போது யானை இடைதங்கல் இல்லத்தில் மருத்துவம் செய்யப்பட்ட 240 வன விலங்குகளில் 98 பேர் இறந்துள்ளன. இந்த இறந்த வன சீவராசிகள் தொடர்பாக பிணிப் பரிசோதனை தன்னாய்வு தீர்மானித்தல் குறிப்புகள் விவரமாகவும் தெளிவாகவும் காணப்படவில்லை.

(ஆ) மின்னேரியா மற்றும் உடவலவ தேசிய வனப் பூங்காக்கள் தொடர்பாக 2017 ஜுலை மற்றும் அக்தோபர் மாதங்களின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது தேசிய வனப் பூங்காக்களை பார்வையிடுவதற்கு வந்திருந்த சுற்றுலா பயணிகளுக்கு நுழைவுப்பத்திரம் வழங்கியது தொடர்பாக வாயில் பிரதி மற்றும் சிராப்பர் பிரதிகளை பரிசோதனை செய்த போது ரூபா 1,894,597 இற்கான பணம் குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. அது தொடர்பாக நிறுவனத்தினால் விசாரணைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) தனியார் நிறுவனமொன்றிலிருந்து நன்கொடையாகக் கிடைத்திருந்த 2015 ஆண்டின் போது உடவலவ யானைகள் இடைத்தங்கள் இல்லத்திற்கு கிடைத்திருந்த ரூபா 1,053,485 தொகைக்கான பண்டங்கள் பெறுப்பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை.

## 4.4 முறைசார் விதமாக உரித்தாக்கப்படாத காணிகள்/ ஆதனங்களில் செயற்திட்டங்கள் ஆரம்பித்தல்

நிதியத்தின் தலைமை அலுவலகக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் சட்டரீதியாக உரிமையினை நிதியத்திற்கு பெற்றிருக்காததுடன் அவ் அலுவலகத்திற்கு புதிதாக ஒரு பகுதி நிர்மாணிப்பதற்காக வரி இன்றி ரூபா 6,322,500 தொகைக்கான ஒப்பந்த வேலை உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டு முற்பணமாக 2017 செப்டம்பர் 11 திகதி ரூபா 1,264,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் 18 திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2018 பெப்ரவரி 18 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 மே 30 வரையும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் பௌதீக முன்னேற்றம் 15 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது.

## 4.5 வாகனப் பாவனை

கிதுல்கொடே அடவிப் பாதுகாப்பு அலுவலகத்திற்கு உரிய கப் வண்டி ஒன்று 2016 அக்தோபர் 18 ஆம் திகதி விபத்திற்கு உள்ளாகிய காரணத்தினால் ரூபா 124,000 தொகையை அண்மித்த மொத்த சேதம் ஒன்று ஏற்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி விசாரணை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. மேலும், விபத்து ஏற்பட்டு ஒரு வருடத்தை கடந்திருந்த போதிலும் குறிப்பிட்ட கப் வண்டியின் திருத்த

வேலைகள் மேற்கொள்ளப்படாமல் கிதுல்கொடே அடவி அலுவலக வளவில் பாதுகாப்பற்ற நிலையில் நிறுத்தப்பட்டிருந்தது.

## 5. நிலைபெறு தகு அபிவிருத்தி

### 5.1 நிலைபெறு தகு அபிவிருத்தியின் குறிக்கோள்களை நெருங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரழ் தொடர்பாக அறிந்திருந்த காரணத்தினால் வனவிலங்கு பாதுகாப்பு நிதியத்தினால் தனது செயல்நோக்கின் பிரகாரம் நெருங்கப்பட வேண்டியிருந்த குறிக்கோள்கள் பின்வருமாறு இனங்காணப்பட்டிருந்தது.

(i) நிலைபெறு தகு அபிவிருத்திக்காக சமுத்திரங்கள் மற்றும் கடல்கள் மற்றும் சமுத்திர வளங்களின் பாதுகாப்பு நிலப்பயன்பாடு

(ii) ஆள்புல சுற்றாடல் முறைமைகளை பாதுகாத்தல், மீள்நிறுவித்தல் மற்றும் நிலைபெறு தகு பயன்பாட்டை மேம்படுத்துதல், வனாந்தரங்கள் நிலைபெறு தகு முறையில் முகாமைத்துவம் செய்தல், பாலை வனப்படுத்துதல் மற்றும் உயிரியல் பல்வகை தன்மைகள் அழிவடைதலை நிறுத்துதல்.

(iii) நிலைபெறு தகு அபிவிருத்திக்குத் தேவையான உலகளாவிய மற்றும் திட்டமிட்ட செயல்முறைகளை பலப்படுத்துதல் மற்றும் புனர்வாழ்வளித்தல்.

(ஆ) மேற்கூறிய (அ) இன் பிரகாரம் குறிக்கோள்களை இனங்கண்டிருந்த போதிலும் அந்த குறிக்கோள்களுடன் தொடர்புடைய இலக்குகள், அடிப்படைத் தரவுகள், இலக்குகளை நெருங்க வேண்டிய திருப்பு முனைகளை போலவே முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான சுட்டிகளை இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையில் பலவீன நிலைமை ஒன்று காணப்படுகின்றது என உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை பலப்படுத்துவதற்கான நுழைவு ஒன்று நிறுவனத்தில் காணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் நிதியத்தின் பங்களிப்பு விரிவடைவதற்கு ஒப்பாக உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பதவியணியினை பலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் வருடாந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தில் அடங்கியுள்ள பங்களிப்பில் நிதியத்தின் செயலாற்றுகை, கணக்காய்விற்கு போதியளவு கவனம் ஒன்று செலுத்தியிருக்கவில்லை.

### 6.2 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த வேலை செயற்பாடுகள்

#### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்திற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ஆ) அனுராதபுர வனசீவராசிகள் வலயத்தின் பெயர் பலகை நிர்மாணித்தல் மற்றும் மின்சார வேலிகளை பராமரித்தலுக்காக நிதியத்தினால் வழங்கப்படும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி நிர்மாணவேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூபா 1,876,440 தொகைக்காக 2 ஒப்பந்த வேலைக்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நிறுவனத்தினால் தேவையான மூலப்பொருட்கள் வழங்கப்பட்டிருக்காமையால் மற்றும் உடன்பட்டிருந்த தொகை உரிய விடயத்திற்காக போதியளவினதாக காணப்படாமையால் ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்தவேலை கைவிடப்பட்டிருந்தது.

## 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே 28 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.4 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்னார் பதவியினர் வாசஸ்தல, அடவிப் பாதுகாப்பு அலுவலகம் மற்றும் தொழிலாளர் உத்தியோக வாசஸ்தலம் என்பன நிர்மாணிப்பதற்காக 2011 ஆண்டின் போது உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டு ரூபா 1,933,200 முற்பணம் ஒன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. முற்பண பிணைமுறி காலவதியாகி இருந்தமையால் செலுத்தியிருந்த முற்பணத் தொகையையும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறு இருக்கும் போது மீண்டும் ரூபா 9,931,179 இற்கான புதிய திருத்திய தொகைக்கு முன்னைய ஒப்பந்தக்காரருக்கே குறிப்பிட்ட விடயம் சாட்டப்பட்டிருந்த போதிலும் சட்டரீதியான உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அரசுக்கு ரூபா 1,933,200 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) உடவலவ யானைகள் இடைத்தங்கல் இல்லத்தை பார்வையிடுவதற்காக வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் கட்டணம் அறவீடு செய்வதற்காக இயந்திர மயப்படுத்தப்பட்ட முறையிலான பற்றுச்சீட்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட விடயத்தை இலகுவாக்குவது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காததுடன் கையினால் எழுதப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டின் மூலம் கட்டணம் அறவீடு செய்தல் நடைபெறுவதாக அவதானிக்கப்பட்டது.

(இ) 2012 ஆண்டின் போது ரூபா 11,730,808 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வில்பத்துவ தேசிய வனப்பூங்காவில் அமைந்துள்ள கொல்லன்கனத்த (வீவல) சுற்றுலா விடுதி நீர் பெறுவதில் சிக்கல் காரணத்தினால் பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

## 6.5 சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

உடவலவை யானை இடைத்தங்கல் இல்லத்தில் யானைக் குட்டிகளுக்கு பால்மா கொள்வனவு செய்வதற்காக வருடாந்தம் 68,985 பால்மா பக்கட்கள் கொள்வனவு செய்யப்படுவதன் காரணத்தினால் பொதி செய்யும் காட்போட், உக்காத உரைகள் மற்றும் பிலாஸ்டிக் கரண்டிகள் போன்ற பொருட்கள் யானைகள் இடைத்தங்கல் இல்ல வளவில் சேகரமாதல் நடைபெறுவதுடன் சுற்றாடல்சார் சேதங்கள் தவிர்த்து கொள்வதற்கு ஏற்ற விதமாக அந்த கழிவுப்பொருட்களை உரிய முறையில் அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | ஆவணங்கள் பேணல் | கணினிகள் பதிவேடு, அடியிதல் புத்தகப் பதிவேடுகள் மற்றும் விரிவான அட்டவணைகள் பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | பிராந்திய அலுவலகங்களில் இருப்பு பதிவேடுகள் உரிய முறையில் பேணப்பட்டிருக்காமை. |
| (இ) | நுழைவுச் சீட்டுக்கள் வழங்குதல் | கணினிகள் மூலம் நுழைவுப் பத்திரங்கள் வழங்கும் சந்தர்ப்பங்களில் தவறாக காசு கையாளப்படுவதற்கு சந்தர்ப்பங்கள் காணப்படல் மற்றும் கிடைக்கும் பணத்தின் உண்மையான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாமை தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் செலவுகள் இடையே முரண்கள் காணப்படல் |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | 13 வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் பதியப்பட்டிருக்கவில்லை. |